**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No.16 of 2023

Deposition of P.W. 2

Name of the Witness: திரு.மகேந்திரன்

Date : 12.02.2026

**குறுக்கு விசாரணை**

வாதி எனக்கு 30, 35 வருடங்களாக நண்பர். வாதி 24 வருடங்களாக அன்னை சத்யா நகரில் குடியிருந்து வருகிறார். வாதி குடியிருக்கும் இடத்தில் ஒரு ரைஸ்மில் உள்ளது என்றால் சரிதான். அந்த ரைஸ்மில் வாதியின் மாமியாருக்கு சொந்தமானது. அந்த ரைஸ்மில் வாதியின் மாமியாருக்கு சொந்தமானது என்பதற்கு ஆவணம் எதையும் நான் பார்க்கவில்லை. வாதிக்கு அன்னை சத்யா நகரில் அவரது மாமியார் வீட்டில் திருமணத்திற்கு முன்பே வீடு கட்டி கொடுத்து விட்டார்கள். அது அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட புறம்போக்கு நிலம், அதில் வாதிக்கு உரிமையில்லை. அதில் வாதி ஓர் அடுக்குமாடி வீடு கட்டியுள்ளார். ரைஸ்மில்லின் அளவு 2 அல்லது 3 சென்ட் இருக்கும். ரைஸ்மில் அமைந்திருக்கும் இடமும் புறம்போக்கு நிலம் தான். ரைஸ்மில்லிக்கான உரிமம் யார் பெயரில் உள்ளது என்று தெரியாது. ஆனால் வாதி சிறுதொழில் சான்று அவர் பெயரில் இருப்பதாக சொன்னார். புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்டு இருக்கும் கட்டத்திற்கு எந்த சிறுதொழில் சான்று கொடுக்கமாட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. வாதி என்னுடைய நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வீடு, ரைஸ்மில் அமைந்திருக்கும் இடம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

2) வாதியின் அப்பா ராஜிகிருஷ்ணன் 4 வருடத்திற்கு முன்பாக இறந்தார். வழக்கு மதிகோண்பாளையத்தில் உள்ள சொத்து, இரும்பத்தூரில் உள்ள சொத்து, அரியகுளத்தில் உள்ள சொத்திற்கு வழக்கு போடப்பட்டுள்ளது. அரியகுளம் மற்றும் இரும்பத்தூரில் உள்ள சொத்திற்கு வாதியின் அப்பா பெயரில் கிரைய பத்திரம் பார்த்தேன். ஆனால் அதன் அளவு, பட்டா எண் எனக்கு தெரியாது. மதிகோண்பாளையத்தில் உள்ள சொத்துக்கள் வாதியின் பாட்டி முனியம்மாள் பெயரில் உள்ளது. ஆனால் அந்த ஆவணம் எதுவும் நான் பார்க்கவில்லை. வாதியின் அப்பா, அம்மா என்னிடம் பாட்டி முனியம்மாள் பெயரில் இருப்பதாக சொன்னார்கள். பாட்டி முனியம்மாவிற்கு எப்படி பாத்தியம் என்று எனக்கு தெரியாது. வாதியின் அம்மா மதிகோண்பாளையத்தில் இருக்கிறார். அவர் நல்ல உடல்நிலையில், மனநிலையில் இருக்கிறார்.

3) ராஜிகிருஷ்ணன் 35 வருடங்களாக புளி வியாபாரம் செய்து வந்தார். அது சம்பந்தப்பட்ட கணக்கு வழக்குகளை நான் பார்த்ததில்லை. புளி வியாபாரத்திற்காக உரிமம் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. ராஜிகிருஷ்ணன் தன்னுடைய 2வது மகனின் மனைவி பெயரிலும், அவர் குழந்தைகள் பெயரிலும் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்திருப்பதாக கேள்விப்பட்டேன், ராஜிகிருஷ்ணனின் 2வது மகனின் குழந்தைகள் பெயர் தெரியாது. அந்த பத்திரம் எந்த வருடம் எழுதப்பட்டது என்று தெரியாது. ராஜிகிருஷ்ணனின் வருமான விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது.

4) வாதி தருமபுரியில் ரைஸ்மில் தொழிலை தவிர, திருச்சியில் ஆயில்மில் வைத்து வியாபாரம் செய்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. வாதி அவ்வப் போது என்னென்ன தொழில் செய்து வந்தார் என்று என்னால் சொல்ல முடியாது. எனக்கு ராஜிகிருஷ்ணன் குடும்பத்தை பற்றி எதுவும் தெரியாது என்றாலும், வாதி எனது நண்பர் என்பதால் அவர் சொல்லி கொடுத்தாற் போல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.